# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 22 | December டிசம்பர் | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




## பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?

ரோமர் 6:2


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** | ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 13 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L

அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**




## கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு

## கிருபையின் கீதங்கள்

**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்

514 தமிழ் பாடல்கள்


29 ஆங்கில பாடல்கள்

100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

பாவத்தினை மேற்கொள்ள
உதவும் பரிசுத்தரின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International

# பாவத்திற்கு எதிரான போராட்டம்

ஆசிரியர் உரை
**P.C. பிலேமோன் ராஜா**



*கர்த்தருடைய வேதத்தின் மீது பற்றுக்கொண்ட கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்.*

எபிரேயர் 12ம் அதிகாரம், கர்த்தருடைய பிள்ளைகளை பாவத்திற்கு எதிராக போராடும்படி அறைகூவல் விடுக்கின்றது. பாவங்கள் நிறைந்துக்கிடக்கின்ற இந்த கொடிய உலகத்தில், அதற்கு எதிராக போராட வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். அது நமது கடமை மற்றும் பொறுப்பாகவும் இருக்கின்றது.

**எபி 12:4** "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே."

ஆகையால் நாம் இந்த மாதம் கடவுளுடைய பிள்ளைகள் பாவத்திற்கு எதிராக எப்படி போராடி மேற்கொள்வது என்பதை தியானம் செய்வோம். ஆண்டின் இறுதியில் இருக்கின்ற நமக்கு, இதைப்படிப்பது சாலச் சிறந்த ஒன்றாகவும், சிறந்த தீர்மானங்களை எடுக்க உந்துவதாகவும் இருக்கும் என நான் கர்த்தருக்குள் நம்புகின்றேன்.

### 1. பாவத்தைப் பாவமாகப் பார்ப்போம்

பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் முதலாவது செய்ய வேண்டியது பாவத்தினை பாவமாகப் பார்க்க வேண்டும். கர்த்தர் செய்யக்கூடாது என்று சொன்னதை செய்வதாக ஏவாள் உணரவில்லை. ஏனெனில், ஏவாளிற்கு பாவம் பாவமாக தெரியவில்லை. ஆகையால் கர்த்தர் உண்ணக்கூடாது என கட்டளையிட்டு விலக்கின மரத்தின் கனியினை உண்பது, ஏவாளிற்கு அறிவாக, இனிமையாக, விரும்பதக்க ஒன்றாக இருந்தது.

**ஆதி 3:6** "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதுக்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்."

இன்றைய நாட்களில் அநேகருக்கு பாவத்தினை பாவமாக பார்க்கும் பார்வை இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதே. பாவத்தின் வீரியத்தினை குறைத்து பேசுகின்றோம் மற்றும் மதிப்பிடுகின்றோம். பாவத்தினை தவறு என்றும், இன்னும் அதற்கு கீழே சென்று, "இது உனக்கு தவறாகபடுகின்றது, ஆனால் எனக்கு சரியாக தெரிகின்றது. ஆகையால், உனக்கு சரியானதை நீ செய், எனக்கு சரியாக தோன்றுபவைகளை நான் செய்கின்றேன்," என பாவத்தினை சரியாக மாற்றிவிட்ட அவலமும் இருக்கத்தான் செய்கின்றது.

ஆனால், தானியேலுக்கும் அவரது நண்பர்களுக்கும் பாவம் பாவமாகவே தெரிந்தது. அதனால் அரச கட்டளையை மீறி, தன்னை, உண்ணும் உணவினால் தீட்டுப்படுத்தக் கூடாது என்று முடிவெடுத்து அதை செய்தனர். அதில் பாவத்திற்கு எதிராக வெற்றியும் பெற்றனர். மேலும் கர்த்தருடைய கிருபையையும் ஆசீர்வாதத்தினையும் பெற்றனர். **(தானியேல் 1:8,15,17)** "தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்."

பாவத்தினை பாவமாகவே பார்ப்போம்! கிறிஸ்து ஒரு செயலை, வார்த்தையை மற்றும் சிந்தையை எப்படிப் பார்ப்பாரோ, அப்படியே பார்க்கவும், பாவிக்கவும் பழகுவோம். பாவத்தோடு சமரசம் செய்துகொள்ள

வேண்டாம்! அதை சரி என ஏற்கவும், அதன் வீரியத்தினை குறைத்து மதிப்பிடவும் வேண்டாம். ஏனெனில் ''பாவத்தின் சம்பளம் மரணம்'' **(ரோமர் 6:23),** என்பதனை மறந்துவிடவும் முளைப்பிக்காது. அதுபோலதான், பாவம் என்றுமே சரியானதாகவோ, பரிசுத்தமானதாகவோ மாறிவிடாது!

## 2. பாவத்தைக் குறித்து நாணமடைவோம்

பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், நாம் அடுத்து செய்ய வேண்டியது. பாவங்கள் நமக்கு வெட்கமாக தோன்ற வேண்டும். தாவீது தான் செய்த பாவத்தினைக் குறித்து உணர்வடைந்த போது, தான் செய்தது குறித்து மிகவும் வெட்கமும் அடைந்தார். ஆகையால் தன் பிறப்பே வெக்கமானது என புலம்புகின்றார். **சங்கீதம் 51ஐ** படிக்கும் போது, இதை நாம் நன்கு உணர முடியும்.

அநேகர் செய்த பாவத்தினை குறித்து நாணமடையாமல் (வெட்கப்படாமல்), அதை சுட்டிகாட்டியவர்கள் மீது கோபமடைகின்றனர். கலாத்திய சபையார் அப்படி செய்ததை, பவுல் மிகவும் வருத்தத்துடன் பதிவு செய்கின்றார். **(கலாத்தியர் 4:16)** "நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே, உங்களுக்குச் சத்துருவானேனோ?"

இன்னும் சிலர் ஒருபடி மேலே சென்று, குற்றம் சுட்டிகாட்டியவருக்கு எதிராக, அவர்களை திருப்பி குற்றப்படுத்தவோ, ''யாரு தான் யோக்கியமா இருக்கா? யாரும் செய்யாததையா நான் செய்துவிட்டேன்'' என துணிகரமாகவே பேசுகின்றனர். அவ்வாறு பேசுவதும், செய்வதும் கர்த்தரை மிகவும் வேதனைப்படுத்தும். மேலும், அது அவர்கள் வாழ்வை நாசப்படுத்தும்.

**தானியேல் 9:8** ''ஆண்டவரே, உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால்,ந ாங்களும்எ ங்கள்ர ாஜாக்களும்எ ங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும் வெட்கத்துக்குரியவர்களாணோம்." பாவம் என்பது வெட்கக்கேடானது. ஆகையால் பாவம் செய்வதைக் குறித்தும், செய்த பாவத்தினை குறித்தும் தான் வெட்கப்பட வேண்டும். அவைகளை தான் வெட்கமாக எண்ணவும் வேண்டும். ஆனால் அநேகர், தாங்கள் செய்த, செய்கின்ற பாவம் வெளியே தெரிவது தான் அசிங்கம் என நினைக்கின்றனர்.

உண்மையில், பாவமே அசிங்கமானதாகும்! மாறாக, பாவம் வெளியே தெரிவது வெட்கம் என எண்ணுவோரும், செய்த பாவத்தினை ஏன் செய்தேன் என நியாயம் கற்பிக்க முயல்வோரும், ரகசியமாக அந்த பாவத்தினை தொடரவும், பாவத்திற்கு எதிராக செல்வதிற்கு பதில், ஆதரவாகவும் நிலைநிற்கவே விரும்புகின்றனர். பாவம் என்பது வெட்க கேடானது என்ற புரிதல் மிகவும் அவசியமானதாகும்.

## 3. பாவத்தைக் குறித்து துக்கமடைவோம்!

பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் செய்ய வேண்டிய அடுத்த செயல் நாம் செய்த பாவங்கள் சுட்டிக்காட்டப்படும் போது, செய்த பாவங்களை குறித்து மனம் வருந்த வேண்டும். இன்றைய நாட்களில் அநேகர் செய்த பாவத்தினை சுட்டிக்காட்டினால், 'ஐயோ! இப்படி செய்துவிட்டோமே!' என கவலைப்படுவதில்லை. மாறாக, இப்படி சொல்லி காமிக்கிறாங்களே!, என சொன்னவர்கள் மீது வருத்தமடைகின்றோம். இதை தான் பைபிள், உலக துக்கம் என்கின்றது. அதாவது, இந்த உலகத்திற்கு ஏற்ற துக்கம் அது நன்மை பயக்காது!

மாறாக, செய்த பாவத்தினை குறித்த உண்மையான வருத்தம் அடைவோர், கர்த்தருடைய அன்பும், அவருடைய வார்த்தையும் தங்களை மனந்திரும்பி வாழ அழைக்கின்றது என உணர்ந்து, தங்களை மனந்திரும்புதலை நோக்கி திருப்புவர். இதை வேதாகமம் கர்த்தருக்கு உகந்த துக்கம் என்கின்றது. இது அந்த நபரின் வாழ்வில் விடுதலையை, கர்த்தரின் இரக்கத்தினை கொண்டு வந்து சேர்க்கும்.

கர்த்தருக்கு உகந்த துக்கம் கொண்டதற்காக பவுல் கொரிந்து சபையாரை பாராட்டுகின்றார். **(2 கொரிந்தியர் 7:9–11)** "இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம், அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான

மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப் பண்ணினீர்கள்."

பேதுரு தான் செய்த பாவத்தினைக் குறித்து மனங்கசந்து அழுதான். அந்த அழுகை என்பது அவன் திருந்துவதற்கு ஏதுவாக இருந்தது. அவன் தன் இருதயத்தினை கர்த்தரை நோக்கி திருப்பி, திருந்தினான். **(மத்தேயு 26:75)** "அப்பொழுது பேதுரு; சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்."

யூதாஸ்காரியோத்தும் துக்கமடைந்தான். ஆயினும் அந்த துக்கத்தினை மனந்திருந்தி வாழும்படி கர்த்தரை நோக்கி திருப்பாமல், தன் இஷ்டப்படியே மறுபடியும் தவறான முடிவெடுத்தது, பாவத்தின் மேல் பாவத்தினை கூட்டிக்கொண்டான். **(மத்தேயு 27:3–5)** "அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்பார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்."

நாம் பாவத்தினை குறித்து துக்கமடைவோம். அந்த துக்கம் நம்மை கர்த்தரை நோக்கி திருப்பும்படியாக கவனத்தில் கொள்வோம்!

## 4. பாவத்தை ஒத்துக்கொள்வோம்!

பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் அடுத்து செய்ய வேண்டியது, நாம் செய்த பாவங்களை ஒத்துக்கொண்டு, அதை அறிக்கையிடுவதாகும். **(நீதி 28:13)** "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்."

ஆதி மனிதர்களாகிய ஆதாம் ஏவாள் தொடங்கி, மனித வர்க்கத்திற்கு இன்றுவரை பெரிய பிரச்சனைகளில் ஒன்று, தாங்கள் செய்த பாவத்தினை ஒத்துக்கொள்வது, பாவத்தினை செய்ததற்கான காரண காரியங்களை சொல்வது. வேதாகமத்தின் பதிவுகளில் கூட, வெகு சிலரே ஒத்துக்கொண்ட அறிக்கையிட்டுள்ளனர். அதில் தாவீது அரசனும் ஒருவர்; தான் செய்த பாவத்தினை உணர்ந்த உடனே, சிம்மாசனத்தினை விட்டிறங்கி, கர்த்தரிடமும், கர்த்தருடைய வார்த்தையை சொன்ன தீர்க்கனிடமும் அறிக்கையிட்டு ஒத்துக்கொண்டார். **(2 சாமுவேல் 12:13)** "அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில் நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்."

புதிய ஏற்பாட்டிலும், ஆண்டவர் சொன்ன உவமையில், இளைய மகன் தன் பாவத்தினை உணர்ந்து அறிக்கையிட்ட போது வாழ்வு பெற்றான் என்பதனை ஆண்டவர் அறிவுறுத்தினார் **(லூக்கா 15).** பாவங்களை ஒத்துக்கொள்வது அசிங்கம் அல்ல; அது நேர்மையின் வெளிப்பாடு. அதற்கு கர்த்தர் மன்னிப்பையும், மறுவாழ்வையும் பரிசாக அளிக்கின்றார். **1 யோவான் 1:9** "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

## சிறுவர்க்கான கேள்விகள்

குட்டீஸ் ! கீழே உள்ள கட்டங்களில் சில பாவங்கள் ஒளிந்துள்ளன அவைகளை கண்டுபிடித்து எழுதி அனுப்புங்கள் !

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | வி | சூ | வா | சு | ம் | ய் | பொ |
| ஞ் | ல் | ல் | க் | ண் | அ | ன் | றா |
| பெ | த | ட | கு | டை | பு | ரி | மை |
| ரு | டு | த | தி | கா | ப் | பு | சி |
| மை | ரு | ப | ரி | ரு | று | கை | ப |
| ரு | தி | ரு | ட் | ம் | வெ | று | க் |

பாவத்தினை அறிக்கையிட்டதிலிருந்து, தாவீது அரசனின் நேர்மையை நாம் அறிவோம். அறிக்கையிடுதல் என்பது, நாம் பாவங்களை விட்டுவிட்டு வெளியேவர உதவிகரமாக இருக்கும். நமக்குள் உறுதியான தீர்மானமாகவும் உருவாக வாய்ப்புகள் அதிகம். ஆகையால், நாம் தாவீது அரசனைப் போல, பாவத்திற்கு எதிராக அதனை அறிக்கை செய்துவிட்டுவிடுவோம். **(சங்கீதம் 51:1-4)** "தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்."

## 5. பாவத்தின் சிந்தை, இச்சையை வேரருப்போம்!

பாவத்திற்கு எதிராக நாம் செய்ய வேண்டிய போராட்டத்தில், நாம் செய்ய வேண்டிய மற்றுமொரு செயல், பாவத்தினை வேரருப்பதாகும். அதாவது பாவத்தினை பற்றிய எண்ணங்களையும், விருப்பங்களையும் இருதயத்தின் ஆழ்த்திலிருந்து அப்புறப்படுத்துவதாகும், **(கலாத்தியர் 5:24)** "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."

பாவத்தின் எண்ணங்களையும், விருப்பங்களையும் சிலுவையில் அறைந்து கொன்றுவிட வேண்டும். கொன்றுவிட என்ன செய்ய வேண்டும்? முதலாவது, அதனை வெறுக்க வேண்டும், **(2 கொரிந்தியர் 4:2)** "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்."

பாவத்தினை வெறுப்பது என்பது கர்த்தருக்கு பயப்படுகின்ற பயத்தின் வெளிப்பாடாகும், **(நீதி 8:13)** "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன்." பாவம் செய்ய தூண்டுபவற்றை நம் அருகில் வைக்க வேண்டாம், **(சங்கீதம் 101:3)** "தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்க மாட்டேன்; வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன் அது என்னைப் பற்றாது." கர்த்தருடைய வார்த்தையை முழுமையாக விசுவாசிப்போம், **(சங்கீதம் 119:128)** "எல்லாவற்றைப் பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன்." கர்த்தருடைய வார்த்தை நம்மை மாற்ற முழுமையாக ஒப்புக்கொடுப்போம்.

கர்த்தருடைய தாசனாகிய மோசே அவ்வாறாக தான் செய்தார், **(எபி 11:24)** "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து," வேத வசனங்களும் நம்மை அவ்வாறு செய்ய சொல்லியே உந்துகின்றன, **(யூதா 1:23)** "மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்." ஆகையால் நம்மை பாவம் செய்ய தூண்டுகின்ற ஒவ்வொன்றையும் புறக்கணிப்போம். அது பொருளோ, நபரோ அல்லது சூழலோ எதுவாயினும் புறக்கணிக்க பயிற்சி செய்வோம். அது கடினமானது ஆயினும், விட்டுவிட வேண்டாம்.

## 6. பாவத்திற்கு எதிராக ஓடுவோம்

பாவத்திற்கு எதிராக நாம் செய்ய வேண்டிய போராட்டத்தில், நாம் செய்ய வேண்டிய மற்றுமொரு செயல். பாவத்திற்கு எதிர் திசையில் ஓடுவதாகும். இது பயத்தினால் ஓடுகின்ற ஓட்டமல்ல, பரிசுத்தத்தினை மற்றும் பரலோகத்தினை நோக்கி ஓடுகின்ற ஓட்டமாகும். **எபி 12:1-2** "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்."

பைபிள் பாவத்தினை விட்டுவிட்டு ஓட சொல்கின்றது. அது இருக்கின்ற திசையை நோக்கி கூட அமரவோ, உட்காரவோ, செல்லவோ வேண்டாம். எல்லா திசையிலும் பாவம் இருக்கின்றதே என நீங்கள் சொல்வது எனக்கு கேட்கின்றது. நான் சொல்வதின் பொருள், பாவம் செய்கின்ற சூழல்களை,

வாய்ப்புகளை வீணடித்து, விட்டுவிட்டு ஓடக்கடவோம். **1 யோவான் 5:21** "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்."

யோசேப்பு பாவத்தினை விட்டு விலகி ஓடினார். பாவம் செய்ய உண்டான சூழலை புறந்தள்ளி, வாய்ப்பினை வீணடித்தார். **ஆதியாகமம் 39:11,12** "இப்படியிருக்கும்போது, ஒரு நாள் அவன் தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள் போனான்; வீட்டு மனிதரில் ஒருவரும் வீட்டில் இல்லை. அப்பொழுது அவள் அவனுடைய வஸ்திரத்தைப் பற்றிப் பிடித்து, என்னோடே சயனி என்றாள். அவனோ தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான்."

பாவத்திற்கு எதிரான நமது ஆவிக்குரிய மாரத்தான் சிலுவையை நோக்கி தொடரட்டும், பரலோகத்தில் முடியட்டும். தளர வேண்டாம், சோர்ந்து போக வேண்டாம்! உன்னால் ஓட முடியாது என சத்துருவின் எதிர்மறையான பேச்சுக்களுக்கும், ஏற்கனவே நீ விழுந்தவன் என சோர்வின் வார்த்தைகளுக்கும் செவிமடுக்க வேண்டாம். நம்மை பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவினாலே எல்லாம் செய்ய நமக்கு பெலனுண்டு. மறக்க வேண்டாம்! **பிலி 4:13** "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு."

## 7. பரிசுத்த தொடர்புகளை அதிகரிப்போம்

பாவத்திற்கு எதிரான போராட்டத்திலே நாம் இறுதியாக மற்றும் உறுதியாக செய்ய வேண்டியது என்னவென்றால், பரிசுத்த தொடர்புகளை, உறவுகளை அதிகரித்து, பரிசுத்தத்தினை தக்கவைத்துக்கொள்ளவும், அதில் விருத்தியடையவும் முயலுவதாகும். **1 யோவான் 1:3** "நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது".

சும்மா இருப்பது அல்லது வெறுமையாக இருப்பது என்பது பேராபத்தாகும் என ஆண்டவர் இயேசு சொன்ன எச்சரிப்பை நினைவில்கொள்வோம். **மத்தேயு 12:43-45** "அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டு வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது,அ ந்த".ம னுஷனுடையமு ன்னிலையிலும்அ வன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்."

சபையாக கூடிவரும் எந்த ஒரு நிகழ்வையும் தயவு செய்து தவறவிட வேண்டாம் **(எபி 10:24,25)** தினந்தோறும் வேதாகமத்தினை வாசிப்பதையும், தியானிப்பதையும் விட்டுவிட வேண்டாம் **(அப் 17:11).** விட்டுவிட வேண்டியதை விட்டுவிடுவது எவ்வளவு முக்கியமோ, அதேபோல விடாமல் தொடர்ந்து செய்ய வேண்டியவற்றை செய்வதும் மிகவும் முக்கியம். இதை தான் சங்கீதம் 1ல் நாம் படிக்கின்றோம். **சங் 1:1-2,** "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."

நமது உள்ளத்தினை உன்னதமானவரின் வார்த்தையினால் நிரப்பி, பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிப்பெறுவோம். **(சங் 119:11).**

இறுதியாக,

அன்பானவர்களே, இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றபடியினால், அவன் அதை பொல்லாப்பினால், பாவத்தினால் நிறைத்து வைத்துள்ளான். ஆகையால் கோணலும், மாறுபாடான இந்த உலகில், பாவத்திற்கு எதிராக போராடி வெற்றி பெற வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும். அது கர்த்தரின் வசனத்தினாலும், ஆட்டுக்குட்டியின் ஆண்டவர் இரத்ததினாலும் சாத்தியமே **வெளி 12:11** "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்." ஆகையால், நம்பிக்கையுடன் பாவத்தினை எதிர்த்து போராடி, கர்த்தருடைய நாமத்தினாலே வெற்றிப்பெறுவோம். வருகின்ற புத்தாண்டு நமக்கு அவ்வாறே அமைய இப்பொழுதிருந்தே முயலுவோம்!

அன்புடன்,
**-ஆசிரியர்**

# முதல் பாவம்

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் கிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்களையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த முறை உங்களுடன் பைபிளில் உள்ள முதல் பாவத்தினை குறித்து எழுத விரும்புகிறேன். அந்த பாவம், ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதாம், ஏவாள் பாவம் செய்தனர் என நாம் படிக்கின்றோம். ஆயினும், முதலில் பாவம் செய்தது ஏவாளே! அவள், தான் செய்ததுமன்றி, தன் கணவனையும் செய்ய வைத்தாள் என நாம் வாசிக்கின்றோம். உண்ணக்கூடாது என அறிந்தும், கர்த்தருடைய கட்டளையை மீறி உண்டாள். கர்த்தரிடம் முதலில் வேகமாக வருவதும் பெண்கள் தான். கர்த்தருக்கு எதிராக மாறுவதும் முதலில் பெண்களாகிய நாம் தான். ஏவாள் செய்த பாவத்திற்கு தண்டனையை அவள் அனுபவித்தாள் மற்றும் அனுபவிக்கப் போகின்றாள். ஆயினும் அவள் செய்த பாவத்தின் விளைவை, அவளின் பிள்ளைகளாகிய நாம் இன்றளவும் அனுபவிக்கின்றோம் அல்லவா?. ஏவாள் ஏன் பாவம் செய்தாள்? அவள் பாவம் செய்ய காரணம் என்ன?

### 1. பொய்யை கேட்டாள்

**ஆதி 3:1–4** "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; நீங்கள் சாகவே சாவதில்லை;"

ஏவாள் பாவம் செய்ய காரணம், அவள் பொய்யை காதுகொடுத்து கேட்டாள். கர்த்தர் சொன்னது மாத்திரமே சத்தியம்! அதற்கு மாற்றாக சொல்லப்படுவது எல்லாம் உண்மையைப் போல நம் பார்வைக்கு தோற்றமளித்தாலும், அது பொய்யே என்பதை நாம் நன்கு உணர வேண்டும். தேவையில்லாதவற்றை செய்ய தூண்டும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு சிறந்த உதாரணம். ஆகையால் பைபிள் தான் அப்படிப்பட்டவைகளுக்கு நம்மை விலகியிருக்க சொல்கின்றது.

**1 கொரி 15:33** "மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்." மேலும், அப்படிப்பட்டவர்களுக்கும் விலகியிருக்க சொல்கின்றது. **தீத்து 3:10** "வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு." ஆகையால் நாம் என்ன கேட்கின்றோம் என்பதனைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். கேட்பதற்கு சுவாரசியமாக இருக்கின்றது என கேட்கின்றவைகளும், கேடானவைகளாக மாறக்கூடிய அபாயம் உள்ளவையே. சுவாரசியமானவைகளை அல்ல சத்தியத்தினையே கேட்பதற்கு ஆர்வமாக இருப்போம்.

பொய் என்ன உருவம்கொண்டும் நம்மிடத்தில் வரலாம். பொய்யை, தேடி போய் கேட்க வேண்டிய அவசியம் கூட ஏற்படாமல் இருக்கலாம். ஏனெனில் நம் வீடுகளில் உள்ள தொலைக்காட்சி பெட்டியும், நம் கைகளில் தவழ்கின்ற தொலைப்பேசிகளும் அவற்றை எளிதாகவே செய்பவையாக இருக்கவும் கூடும். ஆகையால், கேட்கின்ற விதத்தினை குறித்து கவனமாக இருப்போம். **லூக்கா 8:18** "ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனியுங்கள்; உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் என்றார்."

### 2. பொய்யை நம்பினாள்

**ஆதி 3:5,6** "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். "

ஏவாள் பாவம் செய்ய மற்றொரு காரணம், அவள் பொய்யை நம்பினாள். அவள், பாவத்தில் விழுந்து சாபம் பெறும்வரையில், அது அவளுக்கு தெரியாமல் போனது மிகவும் வேதனையான ஒன்றுதான்.

பொய்யை நம்புகின்ற பழக்கம் நம் அநேகருக்குள்ளும் இருக்கலாம். உதாரணமாக, கர்த்தர் படைத்த எல்லா நாட்களும் நேரங்களும் நல்லவை தான் என்றாலும், அதில் சிலவற்றை இந்த உலகம், நல்ல நாள், நல்ல நேரம் என நம்புவது போல, நாமும் நம்பக்கூடியவர்களாக இருக்கின்றோம். இப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டதற்காக பவுல், கலாத்திய சபையாரை கடிந்துக்கொண்டார். **கலாத்தியர் 4:8–11** "நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன்."

### 3. பொய்யை செயல்படுத்தினாள்

**ஆதி. 3:6** "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்."

ஏவாள் பாவத்தினை செயல்படுத்தினாள்; அதாவது, தான் நம்புகின்ற பொய்யை பயிற்சி செய்தாள். அதை அறிவாக, இன்பமாக எண்ணினாள். **எந்த ஒரு நபரும்ப ாவம்செ ய்ய,அ வரேக ாரணமாவார்.** சாத்தான் நம்மை பாவம் செய்ய தூண்டுகிறானே தவிர, செய்ய வைக்க வைப்பதில்லை. அவனுடைய தூண்டுதலுக்கு உட்பட்டு நாமாகத்தான் செய்கின்றோம். இதை தான் யாக்கோபு, பரிசுத்த ஆவியினாலே நமக்கு தெளிவாய் விளங்க செய்கின்றார். **யாக்கோபு 1:13–15** "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்."

எனக்கு பிரியமான சகோதரிகளே, ஏவாள் பாவம் செய்தாள்; காரணம், பொய்யை கேட்டது; நம்பியது; மற்றும் அதனை பயிற்சி செய்தது ஆகும். ஆகையால் நாம் பாவம் செய்யாமல் இருக்க, பாவம் நுழைவதற்கான வழியாக நமது காதுகளை பயன்படுத்தாமல், சத்தியத்திற்கு எதிரானவைகளை கேட்பதை முற்றிலும் தவிர்த்து, சத்தியத்தினை கேட்போம்!

***பொதுவான செய்திகள்***

## இந்தியாவில் அதிகரிக்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள்...

❖ இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 7.3 சதவிகிதம் அதிகரித்திருப்பதாக சமீபத்தில் வெளியான தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

❖ பாதிக்கப்படும் பெண்களின் பெயர்கள் மட்டுமே மாறுகிறதே தவிர, பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் குறைந்தபாடில்லை. அதை ஆதாரப்பூர்வமாக உறுதிபடுத்தும் விதமாக மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (என்.சி.ஆர்.பி) சமீபத்திய அறிக்கை அமைந்திருக்கிறது.

❖ இந்தியாவில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற குற்றங்கள் 2017ம் ஆண்டில் 2018ம் ஆண்டில் 3,78,236, 2019ம் ஆண்டில் 4,05,861.

❖ மேற்கண்ட எண்ணிக்கையை வைத்துப் பார்க்கையில், ஒவ்வொரு ஆண்டும் குற்ற விகிதம் அதிகரித்துக்கொண்டே செல்வதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.

❖ 2019ம் ஆண்டு பெண்களுக்கு எதிரான அதிக குற்றங்கள் நடைபெற்ற மாநிலங்களின் வரிசையில், 59,853 குற்றங்கள் பதிவாகி உத்தரப்பிரதேசம் மாநிலம் முதலிடத்தில் இருக்கிறது. 41,550 குற்றங்கள் பதிவாகி ராஜஸ்தான் மாநிலம் இரண்டாம் இடத்திலும், மகாராஷ்ட்ரா 37,144 குற்றங்கள் பதிவாகி மூன்றாவது இடத்திலும் இருக்கிறது.

*- Selected*

# ஆதி சபையில் பாவம் (அனனியா, சப்பீராள்)

அப் 5:1-10

பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே ! உங்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். நம்முடைய வாழ்வில் யாரும் சொல்ல விரும்பாத, யோசிக்ககூடாத செயல் என்ன வென்று பார்க்கும் போது, அது கடவுள் விரும்பாத, வெறுக்கின்ற பாவமாக இருக்கின்றது. பாவம் என்பது கடவுளின் கட்டளையை (சட்டத்தை), அதாவது அவரது வார்த்தையாகிய வேத வசனத்தை மீறி நடப்பதே ஆகும். **(I யோவா 3:4).** பாவம் ஒரு நபருடைய வாழ்க்கையை தேவனிடமிருந்து எளிதில் பிரித்து விடுகிற ஒன்றாக இருக்கிறது. அப்படியே முதல் நூற்றாண்டு சபையிலும் ஒரு பிரச்சினை இருந்தது. அனனியா சப்பீராள் என்ற தம்பதியினர் தங்களுடைய நிலத்தை விற்று, அதில் வரும் தொகையை கர்த்தருக்கென்று காணிக்கையாக கொடுக்க தீர்மானம் பண்ணினார். ஆனால் அதனை கொடுக்க தவறி பாவம் செய்தனர். அதனால் அவர்கள் மரிக்கும் அளவுக்கு சோகமான நிகழ்வு அவர்களுக்கு ஏற்பட்டது. இவர்கள் என்னென்ன பாவத்திற்குள்ளாக தங்களை உட்படுத்திக் கொண்டார்கள் என்று சற்று விரிவாக பார்ப்போம்.

## அவிசுவாசம் Unfaithful:

**எபி 3:12** சகோதரரே ஜீவனுள்ள முதலாவது இவர்களுக்கு அவிசுவாசம் வந்ததை பார்க்க முடிகின்றது. எப்பொழுது கடவுளை நம்புவதை தாண்டி உலகப் பொருளின் மீது கவனம் செல்கிறதோ, அப்பொழுது அவிசுவாசம் வரும். அங்கே அவர்கள் நிலத்தின் விற்கப்பட்ட ஒரு பங்கை எடுத்து தங்களுக் கென்று சேமித்து வைக்குமளவிற்கு பொல்லாத இருதயம் கொண்ட, கடவுளின் மீது நம்பிக்கையில்லாத விசுவாசமற்ற மக்களாய் நிற்கின்றனர். இந்த அனனியா மற்றும் சப்பீராள். இது மிகவும் ஆபத்தானது. அவிசுவாசம் கடவுளின் மீது நம்பிக்கையை குறைத்து உலக சந்தோஷத்திற்காக நம்மை பாவத்திற்குள்ளாக தள்ளும்; அதே செயல்தான் இங்கு இவர்களுக்கும் நேர்கின்றது. **(அப் 5:2).**

## சுயநீதி Self Righteous:

**அப் 5:2,4** இரண்டாவதாக, அனனியா மற்றும் சப்பீராள் சுயநீதிக்காரர் களாக இருந்தனர். கடவுளை திருப்திபடுத்த வேண்டிய இடத்தில் இருக்க வேண்டிய இவர்கள், தங்களுடைய திருப்தியை முன்னிலைப்படுத்தி, கடவுளை பின்னுக்குத் தள்ளி அவர்களின் நீதியை வெளிப்படுத்தியதால், அழிவுக்கு செல்கின்றனர். இந்த அனனியா, சப்பீராள், கடவுளுக்கு கொடுக்க தீர்மானித்ததை, தாங்கள் பகுதி திருடியிருக்கின்றோம் என்கின்ற சிந்தனை வருவதற்கு பதிலாக, 'நமக்கு என்று எதுவும் வேண்டாமா?' என்ற சுயம் சார்ந்த எதிர்பார்ப்பு அவர்களை கடவுளை மீறி எண்ண வைத்து, சுயநீதி என்ற பாவத்திற்கு ஆளாக்கியது.

## பெருமை Pride:

**யாக் 4:6, லேவி 23 : 29.** அனனியா, சப்பீராள் தங்கள் காணிக்கையினால் கடவுளை உயர்த்தும் வேலையை செய்யாமல், 'எங்களுக்கென்று எதும் வேண்டாமா?' என யோசித்து கொஞ்சத்தை வஞ்சகமாய் சேர்த்து வைத்து, பெருமையாய் நடந்து கடவுளை வஞ்சித்தனர். தாழ்மையை வெளிக்காட்ட வேண்டிய இடத்தில், பெருமை முன்னிலைப்பட்டது. கடவுளுக்கும் எதிராளியானார்கள். பெருமை வந்து விட்டால் சுயம் வந்துவிடும். சுயம் தன்னை முன்பாக நிறுத்தி, பெருமையை செயல்பட அனுமதிக்கும். பெருமை செயல்படும் போது தாழ்மை செத்துபோகின்றது. அதனால் கடவுளின் நன்மை கிடைக்காமலும் போகின்றது.

எனக்கு அன்பான வாலிபர்களே! ஆதித் திருச்சபையில், ஒரு குடும்பத்தின் மூலமாக, எப்படிப்பட்ட ஆபத்தை விளைவிக்கின்ற பாவம் இருந்தது என்பதை பார்த்தோம். எனவே, நாமும் பாவம் செய்ய தூண்டுகின்ற பண ஆசையை தவிர்த்து அவிசுவாசம், சுயநீதி மற்றும் பெருமை போன்ற பாவங்களுக்கு நம்மை நாமே கர்த்தருக்குள் விளக்கி காப்போம்.

– உங்கள் அண்ணன்

**JP**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
2. M. ராஜா – கரூர்
3. M. ஜோனா – கரூர்
4. S. கனிஸ்கா – கரூர்
5. S. லக்ஷிதா – கரூர்
7. P. அன்னாள் – மதுரை
8. P. டேனியல் – மதுரை
9. A. ஹானா ஜோதி – மதுரை

- ADY

பாடம் - 1

## யூத மற்றும் ரோம வரலாற்றாலர்கள்

சில எதிர்ப்பாளர்களின் கூற்று என்னவெனில், இயேசு கிறிஸ்து எப்பொழுதாவது வாழ்ந்ததற்கும், பெரிய அதிசயங்களை செய்ததற்கும், ரோமச் சிலுவையில் மரித்ததற்கும், அல்லது மரித்தவர்களில் இருந்து உயிருடன் எழும்பியதற்கும், நிச்சயமான ஆதாரங்கள் ஏதும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியில் இல்லை என்பதே!

இது உண்மையா? வேதாகமத்திற்கு வெளியில் இயேசுவைப் பற்றி ஏதேனும் ஆதாரங்கள் உண்டா? இனி வரப்போகும் பாடங்களை படித்து, நீங்களே நீதிபதியாய் இருந்து முடிவு செய்யுங்கள்.

ரோம அரசாங்கத்தின் முக்கியத்துவம் இல்லாத, ஒதுங்கிய ஒரு பகுதியில் இயேசுவின் ஊழியம் சம்பந்தப்பட்டதாகையால், உலக வரலாற்றில் அவரைப்பற்றி இவ்வளவு விபரங்கள் இருக்கிறது என்பது ஆச்சர்யமான ஒன்று. இந்தப்பாடத்தில், மிகப்பெரிய ரோம மற்றும் யூத பதிவேடுகளில் சிலவற்றை நாம் ஆராய்வோம்.



### ஜோசேபஸ் (Josephus):

ஃலெவியஸ் ஜோசேபஸ் என்பவர்தான், இயேசு கிறிஸ்துவைப்பற்றி குறிப்பிட்ட, மிக பழமையான கிறிஸ்தவரல்லாத எழுத்தாளர். யூதரோம போரின் போது, கலிலேயாவில் இருந்த ரோமர்களுக்கு எதிராக புரட்சிப்படையை வழிநடத்திய ஒரு யூதன், ஜோசேபஸ் (கி.பி. 66-74). ரோம ஜெனரலான வெஸ்பாசியன், ஜோடபாடா (Jotapatta) என்ற பட்டணத்தை பிடித்தபோது, ஜோசேபஸ் தானாக கைதாகி தன்னுடைய மீதி காலத்தை ரோமர்களை சேவிப்பதில் கழித்தார்.

கி.பி. 37ல் ஜோசேபஸ் பிறந்து, ரோமபுரியில் கி.பி. 94ல் மரித்தார். ஆகையால் அவர், அப்போஸ்தலரின் சமகாலத்தவர் ஆவார். முதல் நூற்றாண்டில் பிற்பகுதியில் அவர், இரண்டு மிகப்பெரிய வரலாற்று படைப்புகளை எழுதினார்; அவை "யூதப் போர்கள்" (The Jewish Wars) மற்றும் "யூதரின் தொன்மையான நடைமுறைகள்" (Jewish Antiquities).

இந்த "யூதரின் தொன்மையான நடைமுறைகள்"ன் புத்தகம் 20, பாடம் 9ல், இந்த ஜோசேபஸ் இயேசுவைப் பற்றியும் அவரது சகோதரர் யாக்கோபைப் பற்றியும் குறிப்பிடும் போது, "ஃபெஸ்டஸ் (Festus) இப்பொழுது மரித்துப் போனான்; மேலும் அல்பினஸ் (Albinus) இருந்தாலும் வீதியில் இருக்கிறான்; அதினால் அவன் (அனனஸ்) நீதிபதிகளின் சங்கமாகிய சானஹெட்ரினை (Sanhedrin) கூட்டி, அதின் முன்பாக கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட இயேசுவின் சகோதரனான யாக்கோபையும் வேறு சிலரையும் கொண்டுவரச் செய்து, அவர்களுக்கு எதிராக சட்டத்தை உடைத்தவர்கள் என்ற குற்றச்சாட்டுகளை உருவாக்கி, அவர்களை கல்லெறியும்படி ஒப்புவித்தான்", என எழுதியுள்ளார்.

அனனஸ் என்ற யூத பிரதான ஆசாரியன், தைரியமும், துடுக்குமான மனிதன். ரோம ஆளுனரான ஃபெஸ்டஸ் மரித்தபின் யூதேயாவுக்கு புதிய ஆளுனர் வந்த நிலையில், இந்த அனனஸ் ஆளுனர் தன் அதிகாரத்தை பயன்படுத்தி இயேசுவின் சகோதரனான யாக்கோபு போன்ற கிறிஸ்தவ தலைவர்களை விடுவிப்பதை தடுத்து நிறுத்தினான்.

ஜோசேபஸின் இந்த வரலாற்றுக் குறிப்பை இதுவரை எந்த விமர்சகரும் மறுத்து வெற்றிபெறவில்லை. இந்த ஜோசேபஸின் குறிப்பு, இயேசுவை "கிறிஸ்து" என்றும் "மேசியா" என்றும், அதாவது "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற உண்மையை உறுதி செய்கின்றது.

ஜோசேபஸ் தன்னுடைய "யூதரின் தொன்மையான நடைமுறைகள்" (Jewish Antiquities) புத்தகத்திலும் 18:63-64ல், இயேசுவைப் பற்றி எழுதியுள்ளார். "இப்பொழுதும் இந்த காலத்தில் இயேசு என்னும் ஒரு ஞானமுள்ள மனிதன் இருந்தார்; அவர் அற்புதங்களை செய்பவராகவும், **உண்மையை**

**விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளும் ஜனங்களின் போதகராகவும் அவர் இருந்தபடியால், அவரை மனிதன் என அழைப்பது நியாயம்தானா என தெரியவில்லை; யூதரிலும் புறஜாதியாரிலும்** அநேகரை அவர் தமது பக்கமாக சேர்த்துக் கொண்டார். அவரே கிறிஸ்து! நமக்குள் இருந்த பிரதான மனிதரின் ஆலோசனைப்படி பிலாத்து அவரை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்த போது, அவரை முதலாவது நேசித்தவர்கள் அவரை மறுதலிக்கவில்லை; ஏனெனில், **தெய்வீக தீர்க்க தரிசிகள் இதைப்பற்றியும், அவரைப்பற்றிய பத்தாயிரத்திற்கு அதிகமான அற்புதமான காரியங்களை முன்னறிவித்தபடியே அவர் மூன்றாம் நாளில் அவர்களுக்கு முன் உயிரோடு எழுந்தார்;** மேலும் அவருடைய யெரினாலே வந்த கிறிஸ்தவர் என்ற ஜாதியும் இந்நாள் வரையும் அழிந்து போகவில்லை" என எழுதியுள்ளார்.

இயேசுவைக் கண்ணாரக் கண்ட சாட்சிகள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே எழுதிய ஒரு கிறிஸ்தவரல்லாத வரலாற்றாலரின் சக்திவாய்ந்த கூற்று இது. இந்த வாக்கியங்கள் முழுவதுமே உலகம் எல்லாம் உள்ளவர்களால் அதிகாரப்பூர்வமானது என கருதப்படுகின்றது. ஆயினும் சில அறிஞர்கள் நினைப்பது என்னவெனில், மேலே நாங்கள் கோடிட்டு காண்பித்துள்ள வரிகள் பின்னாளிலே பிரதியெடுத்தவர்களால் சேர்க்கப்பட்டது என்பதே.

சரி, கோடிட்டு காட்டப்பட்டுள்ள அந்த கேள்விக்குரிய பாகங்களை தவிர்த்தாலும் கூட, இயேசு ஒரு ஞானமுள்ள மனிதன் என்றும், அற்புதங்களை செய்தவர் என்றும், அநேகரை தம்மிடம் ஈர்த்தார் என்றும் ஆதாரங்கள் நமக்குண்டே! யூத மதத்தலைவர்களின் தூண்டுதலின்பேரில், இயேசுவானவர் குற்றம்சாட்டப்பட்டு சிலுவையில் அறைப்பட்டார்; ஆனாலும், அவரை நேசித்தவர்கள் அவரை மறுதலிக்கவில்லை. "கிறிஸ்தவ இனம் அல்லது ஜாதி", ஜோசேபஸ் இந்த வார்த்தைகளை கி.பி. 90களில் இவைகளை எழுதியபோது அழிந்துவிடவில்லை.

### யூதர்களின் சட்டத்தொகுதி (The Jewish Talmud):

பாபிலோனிய சட்டத்தொகுதியானது 63 புத்தகங்களுடன் ஒழுக்கம், வரலாறு, சட்டம், சடங்குகள் மற்றும் தெய்வீகக் காரியங்களைப் பற்றிய அறிவுரைகளை உள்ளடக்கியதாக இருந்தன. அவை பல நூற்றாண்டுக் கால இடைவெளியில் எழுதப்பட்டும், முறைப்படுத்தப்பட்டும் உள்ளது; ஆனால், இயேசுவைக் குறிக்கும் பகுதியானது கி.பி. 70 முதல் 200க்குள் எழுதப்பட்டது. "சான்ஹட்ரின் 4:3a" என்றதின் ஒரு பகுதியானது இவ்வாறு கூறுகிறது:

"பஸ்காவின் சமயத்தில், அவர்கள் இயேசுவை (Yeshu) தொங்கவிட்டனர், (ஒரு பிரதி நாசரேந்திரன் இயேசு) என்று கூறுகிறது. மேலும், ஒரு அறிவிப்பாளர் அவருக்கு முன் நாற்பது நாளும் இவ்வாறு கூறிச் சென்றார்; இவர் கல்லெறியப்படப் போகிறார், ஏனெனில், "இவர் பில்லிசூனியம் செய்து இஸ்ரவேலரை தூண்டி தவறான வழியில் நடத்தினார். இவருக்கு சாதகமாக யாராவது எதையேனும் கூற விரும்பினால், அவர் வந்து இவருக்காக வாதிடலாம். ஆனால், அவருக்கு சாதகமாக எதுவும் இல்லாததினால், பஸ்காவின் நேரத்தில் அவரை தொங்கவிட்டனர்".

– அடுத்த இதழில் தொடரும்...

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-
**No. 92 4421 4421**

**வங்கிக் கணக்கில் செலுத்த,**

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# கர்த்தருடைய இருதயமானவனின் பாவம்

கடவுளுக்கு பிரியமான செல்லப் பிள்ளைகளா! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

இந்த வருடத்தில் மாதங்கள் கடந்துவிட்டது. கடவுளின் பாதுகாப்புக்காக எப்பொழுதும் நன்றி சொல்லிக் கொண்டே இருங்கள்.

இப்பக் கூட கடவுளின் இருதயமானவனான தாவீது ஏன் பாவம் செய்தான் என்று கற்றுக்கொள்ளலாமா?

இஸ்ரவேல் தேசத்தில் ஒருமுறை சண்டை வரும்போது, இராஜாவாகிய தாவீது அண்ணன் என்ன செய்தான் தெரியுமா? போர் வரும்போது, எதிரியோடே சண்டை பண்ணும்போது இராஜாதான் முன் செல்ல வேண்டும், ஆனால் என்ன நடந்தது தெரியுமா? தாவீது அண்ணன் போருக்கு போகவில்லை, ஏன் தெரியுமா? அவனுக்குள் சோம்பேரித்தனம். போருக்கு போகாமல், அவன் வீட்டு மாடியில் உலாவிக் கொண்டே இருந்தான், அதன் விளைவு என்ன நடந்தது தெரியுமா? தாவீது அண்ணன் கடவுளுக்கு பிடிக்காத பாவம் செய்தான்.


கடவுளுக்கு பிரியமான செல்லப்பிள்ளைகளா ! நீங்களும், அநேக நேரம் பள்ளிக்கூடத்தில், ஆசிரியர் பாடம் நடத்தும்போது கவனிக்காமல் இருந்தால், உங்கள் நண்பர்களோடே பேசிக்கொண்டே இருந்தால் உங்கள் கவனம் பாடத்தின் மீது இருக்காது, அதே போல் உங்கள் அம்மா, அல்லது உங்கள் அப்பா உங்களுக்கு ஏதாவது வேலை சொன்னால், அதை செய்யாமல் நீங்கள் விளையாட்டாக வேறு எதையாவது யோசித்துக்கொண்டே இருந்தால் கடவுளுக்கு விரோதியான சாத்தான் உங்களையும் பாவம் செய்ய வைத்துவிடுவான்.



பாருங்கள் தாவீது அண்ணன் சோம்பேறிதனமாக இருந்ததுதான், போருக்கு போக வேண்டிய நேரத்தில் மாடியில் உலாவிக்கொண்டே இருந்ததால் சாத்தான் தாவீது அண்ணனை பாவம் செய்ய வைத்தான். எனவே பைபிள் படிக்கிற நேரத்தில், ஜெபிக்கிற நேரத்தில், சபையில் பிரசங்கம் கேட்கும் நேரத்தில் நீங்கள் விளையாட்டாக, கவனிக்காமல் இருந்தால் உங்களையும், சாத்தான், ஜெபிக்க விடாமல், பைபிள் படிக்கவிடாமல், பிரசங்கம் கேட்கவிடாமல் பாவம் செய்ய வைப்பான், அதனால் கடவுளுடைய செல்லங்களா! சோம்பேரித்தனமாக இல்லாமல், கடவுளுக்கு பிரியமாக இருப்பீர்களா! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : நீதி 16:6** “கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள் .”

**– அன்பு ஏசுதாஸ்**



# அப்போஸ்தலனின் பாவம்



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த போது 12 பேரை தனக்கு சீஷராக தெரிந்து கொண்டார். அவர்களில் ஒருவன் பெயர் தான் யூதாஸ்காரியோத்து. இவரைப் பற்றி தான் நாம் இந்த முறை படிக்கப்போகிறோம்.

இயேசு செய்த ஊழியத்தின் மீதும் அவர்மீதும் பொறாமை கொண்ட யூத மத தலைவர்கள் அவரை கொலை செய்யும்படி சந்தர்ப்பம் பார்த்து கொண்டிருந்தார்கள். இயேசுவுடன் எல்லா இடங்களுக்கும் சென்று அவர் பிரசங்கத்தை கேட்டும், அவர் செய்த அற்புதங்களையும் பார்த்திருந்தான் இந்த யூதாஸ்காரியோத். ஆனாலும் இந்த தலைவர்களிடம் போய் இயேசுவை நான் உங்களுக்கு காட்டிக் கொடுக்கிறேன். எனக்கு என்ன தருவீர்கள் என்று பேரம் பேசினான் அவர்களும் அவனுக்கு 30 வெள்ளி காசை தருவதாக சம்மதித்தார்கள். அவனும் சரியான சமயம் வந்தவுடன் இயேசுவை முத்தம் செய்து காட்டிக் கொடுத்தான். பாவமே இல்லாதவரை போய் காட்டிக்கொடுத்தோமேயென்று அவன் மனம் சோர்ந்து தற்கொலை செய்து கொண்டான்.

குட்டீஸ் ! இந்த யூதாஸ் இயேசுவுக்கு பின்பாக ஊழியஞ்செய்யும்படிக்கு போய்விட்டு அவரை எப்படி காட்டிக்கொடுத்தான்? அவனுக்குள் இருந்த பண ஆசை என்னும் பாவம் தான் அவனை மிகப்பெரிய கொடுமையான பாவத்தை செய்யும்படி தூண்டியது. அதனால் குட்டீஸ் ! நாமும் பணத்தின் மீதோ ஆசை வைத்தோமென்றால் யூதாஸ்காரியோத் ஆண்டவருக்கு விரோதமாக எப்படி பாவம் செய்தானோ அதேப்போல நாமும் பாவஞ் செய்கிறவர்கள் ஆவோம். எனவே ஆண்டவர் விரும்பாத இந்த பண ஆசை என்னும் பாவம் நமக்கு எப்போதும் வராதபடிக்கு நம்மை வசனத்தின் துணை கொண்டு பாதுகாத்துக் கொள்வோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**மனப்பாட வசனம் : தீமோத்தேயு 6:10** "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்."

**– குயினி பிரதீப்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.* **Salvation TV :** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

## டிசம்பர் மாத கேள்விகள்

1. பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் நாம் எப்படி எதிர்த்து நிற்க வேண்டும்?
2. சாவுக்கேதுவான நம் சரீரத்தை, எது ஆள அனுமதிக்க கூடாது?
3. தன் பாவங்களை மறைக்கிறவன் என்ன அடைய முடியாது?
4. "நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன்" என அறிக்கையிட்டது யார்?
5. நம்மை சுற்றி நெருங்கி நிற்கின்ற பாவத்தை என்ன செய்ய வேண்டும்?
6. வெட்கமான அந்தரங்க காரியங்களை என்ன செய்ய வேண்டும்?
7. சங்கீதக்காரன் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யாமல் இருக்க என்ன செய்தான்?
8. ஆகாத சம்பாஷனைகள் என்ன செய்யும்?
9. ஒவ்வொருவரும் எதினால் சோதிக்கப்படுகிறார்கள் என யாக்கோபு சொல்கின்றார்?
10. தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏன்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-01-2022**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. அப் 1:1
2. 35 ஆண்டு
3. பொய் கேட்டு விழுந்ததால்
4. அப் 2:42
5. அப் 8:4
6. அப் 24:25
7. அப் 16:14
8. அப் 4:36
9. அப் 11:26
10. அப் 2:47


### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. குளோரி திலகவதி – சென்னை
2. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
3. Mrs. மேரிராஜ் – மதுரை
4. Mrs. ஹெலன் திலக் – மதுரை
5. Mrs. ஜெயசீலி ஜெயக்கொடி – திருச்சி
6. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
7. R. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
8. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
9. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
10. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
11. Mrs. லீலா ஜோசப் – கோவை
12. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
13. Mrs. பூமணி இஸ்ரவேல் – நெல்லை
14. Mrs. சாந்தி வில்லியம்ஸ் – புதுக்கோட்டை
15. Mrs. M. ஜெனீ – கரூர்
16. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
17. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
18. Mrs.D. மீனாள் – மூலனூர்
19. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
20. R. சரோஜா – தென்கலம்
21. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
22. Mr. சூசை மரியான் – சென்னை
23. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
24. Mrs. செல்லத்தாய் சுவாமி – மதுரை
25. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
26. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
27. S. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
28. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
29. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
30. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
31. D. அலெக்சாண்டர் சாமுவேல் – சென்னை
32. J. விஜய் – மதுரை
33. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
34. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
35. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
36. Mrs. புரோமிளா சாமுவேல் – மதுரை
37. Mrs. K. ராணி மூர்த்தி – ஏர்வாடி
38. Mr. டேவிட் விஸ்வநாதன் – பொள்ளாச்சி
39. கவிதா – காங்கேயம்
40. M. காயத்ரி – காங்கேயம்
41. P. சைனி – காங்கேயம்
42. P. ஸ்டெல்லா மார்க்ரேட் – காங்கேயம்
43. M. வினோத் – காங்கேயம்
44. S. செல்லமணி – காங்கேயம்
45. S. ஐஸ்வர்யா – காங்கேயம்
46. S. பிரேமா – காங்கேயம்
47. A. சாமியாத்தாள் – காங்கேயம்
48. S. தீபா – காங்கேயம்
49. M. சக்திவேல் – காங்கேயம்
50. M. தீபிகா – காங்கேயம்
51. M. பிருந்தா – காங்கேயம்
52. P. சாந்தி – காங்கேயம்

Place of Publication : **Arasaradi, Madurai**
**Printed & Published by P.C. PHILEMON RAJAH**
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th December 2021
Posted at Arasaradi HPO on 10th 11th December 2021

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்
















அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்








உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH












**AVAILABLE FOR SPECIAL PRICE!**

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To